கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறையில் இருக்கின்றன. அதுபோன்ற இயந்திரங்களை இந்தத் தொழிற்சாலையிலே கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தர்மபுரி மாவட்டத்தில் பால் உற்பத்தி கடந்த ஆண்டுகளைவிட அதிக அளவில் உற்பத்தியாகிக் கொண்டிருக்கிறது. மேலும் பக்கத்து மாநிலமான கர்நாடக மாநிலத்திலிருந்தும், பக்கத்து மாவட்டமான வட ஆற்காடு மாவட்டத்திலேயிருந்தும்கூட, பால் கொண்டுவரப்பட்டு, இந்தத் தொழிறசாலையில் பால் பவுடர் உற்பத்தி செய்துகொண்டு வருகிறார்கள். எனவே மேலும் அதிகமாக உற்பத்தியாகின்ற பாலை பவுடர் செய்கின்ற வகையிலே இந்தத் தொழிற்சாலையை அதிநவீன கருவிகளைக் கொண்டு விரிவுபடுத்த அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்குறிப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 173, செல்வி எல்.சுலோசனா ; மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

173–

மேட்டுப்பாளையம் தொகுதியை சிறுதொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுதல்.

9974–செல்வி எல். சுலோசனா:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

மேட்டுப்பாளையம் தொகுதியை சிறுதொழில் துறையில் பின்தங்கிய (Backward area) பகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதுள்ள விதிமுறைகளின்படி மேட்டுப்பாளையம் தொகுதியை சிறு தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க இயலாது.

செல்வி எல். சுலோசனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நீலகிரி மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ள மேட்டுப் பாளையத்தில் பல வருடங்களுக்கு முன்பு உருளைக்கிழங்கு வியாபாரம் மிகவும் சிறப்பாக இருந்தது. ஊட்டி, கோத்தகிரி போன்ற மலைப்

1994 ஏப்ரல் 4]

பகுதிகளில் முன்பு உருளைக்கிழங்கு மற்றும் மலைப்பிரதேசக் காய்கறிகள் அதிகமாக பயிரிட்டு வந்தனர். அதனால் மேட்டுப்பாளையத்தில் உருளைக்கிழங்கு, காய்கறிகள் வியாபாரத்தில் பலர் ஈடுபட்டு அண்டை மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்தும் வந்தனர். கடந்த சில வருடங்களாக ஊட்டி போன்ற மலைப் பகுதிகளில் தேயிலை அதிக அளவில் பயிரிடுவதால் மேட்டுப்பாளையத்தில் உருளைக்கிழங்கு வியாபாரம் நலிவடைந்த நிலையில் உள்ளது. இத்தொழிலில் ஈடுபட்டவர்களும், இத்தொழில் சார்பான இதர தொழிலில் ஈடுபட்டவர்களின் பல குடும்பங்கள் வேலையின்றி பாதிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திட சில தொழிற்சாலைகளை அமைக்க தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் வகையிலே மேட்டுப்பாளையம் தொகுதியை தொழிற்துறையிலே பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் தொழிலில் பின் தங்கிய பகுதிகள் என்ற முறை ஏற்கெனவே இருந்தது. அதனை மாற்றி மாநிலத்தில் தொழில் வளர்ச்சி எல்லா பகுதிகளிலேயும் சமச் சீராக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தொழிலில் பின் தங்கிய பகுதிகளாக வட்ட அளவில் அறிவிக்கப்பட்டு இருப்பதால், தொகுதி அளவில் தொழிலில் பின் தங்கிய பகுதி என்று அறிவிக்க இயலாது. மேலும் அவினாசி வட்டம்-மேட்டுப்பாளையம் தொகுதி அவினாசி வட்டத்திலேயே வருகிறது. அவினாசி வட்டம் ஏற்கெனவே தொழிலில் பின் தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த அவினாசி வட்டத்திற்கு அரசு தருகிற சலுகையை பயன்படுத்தி அங்கே தொழிற்சாலைகளை தொடங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி எல். சுலோசனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,, மேட்டுப்பாளையத்தில் பவானி ஆறு ஓடுவதால் அங்கே தண்ணீர் வசதி உள்ளது. மேலும் கர்நாடகா, கேரளா போன்ற அண்டை மாநிலங்களுக்கு போக்குவரத்துக்கு ஏற்ற வகையில் அந்த மாநிலங்களின் எல்லைப்பகுதியில் மேட்டுப்பாளையம் அமைந்துள்ளது. மேலும் பில்லூர் புனல் மின் நிலையமும் அமைந்துள்ளது. வேலைக்கும் ஆட்கள் நிறைய பேர் கிடைப்பார்கள். கோவை மாவட்டத்தில் பல தொழில் அதிபர்கள் மேட்டுப்பாளையம் தொகுதியில் சிறு தொழில் துவங்க ஆர்வம் உடையவர்களாகவும் இருக்கிறார்கள்.

மேட்டுப்பாளையம் நகரம் அன்னியச் செலவாணியை ஈட்டித் தருகிற ஒரு சிறந்த தொழில் நகரமாக விளங்கி தன்னகத்தே எல்லா வசதிகளையும் பெற்றுள்ளது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதிகள் அனுமதிக்கப்படவில்லை என்றாலும் விதிகளுக்கு விலக்கு அளித்து வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையிலே மேட்டுப்பாளையம் தொகுதியை சிறு தொழிலிலே பின்தங்கிய தொகுதியாக அறிவிக்க அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டம் தொழில் துறையில் பின் தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் கீழ்க்கண்ட நிபந்தனைகள் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும்:

(1) அவ்வட்டத்தில் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அவ்வட்டத்தின் மொத்த மக்கள் தொகையை ஒப்பிடும் போது, இரண்டு விழுக்காடு குறைவாக இருக்க வேண்டும்.

(2) அவ்வட்டத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்களில் செய்யப்படும் முதலீடு ரூபாய் 15 கோடிக்கு குறைவாக இருக்க வேண்டும்.

அந்த வகையில் கோவையைப் பொறுத்த வரையில் வால்பாறை வட்டம், பொள்ளாச்சி வட்டம், பல்லடம் வட்டம், அவிநாசி வட்டங்களை தொழிலில் பின் தங்கிய வட்டங்களாக அரசு அறிவித்திருக்கிறது. மேலும் மேட்டுப்பாளையம் வட்டத்தில் உள்ள மக்கள் தொகையில் 2.33 விழுக்காட்டினர் நடுத்தர மற்றும் பெரும் தொழில்கூடங்களில் பணியாற்றி வருகின்றனர். மேற்படி தொழில் கூடங்களில் 89.56 கோடி முதலீடு செய்யப்பட்டு உள்ளது. மேட்டுப்பாளையம் வட்டத்தில் ஏற்கெனவே சவுத் இந்தியா விஸ்கோஸ், இந்தோ-ஸ்விஸ் சிந்தடிக் ஜெம் தொழிற்சாலை, டான் இந்தியா, யுனைடெட் பிளீச்சர்ஸ், மெட்ராஸ் போர்ஜஸ் அண்டு அலைடு இண்டஸ்ரீஸ், ராமகிருஷ்ணா ஸ்டீல் இண்டஸ்ரிஸ், ராமகிருஷ்ணா ஆக்சிஜன் லிமிடெட் போன்ற நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்கள் ரூபாய் 8956.83 லட்சம் முதலீட்டில் இயங்கி வருகின்றன. இந்நிறுவனங்கள் 4430 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி வருகின்றன.. இதைத் தவிர 379 சிறு தொழில் நிறுவனங்கள் ரூபாய் 700 லட்சம் முதலீட்டில் அங்கே இயங்கி வருகின்றன. அவை 3348 நபர்களுக்கு வேலை வாய்ப்பு நல்கி உள்ளன. ஏற்கெனவே நான் சொல்லியது போல மேட்டுப்பாளையம் தொகுதி அவிநாசி வட்டத்தின் ஒரு பகுதியாக

1994 ஏப்ரல் 4]

அடங்கி இருப்பதாலும், அவிநாசி வட்டம் ஏற்கெனவே தொழிலில் பின் தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டு இருப்பதாலும் அந்த தொகுதியில் உள்ள அவிநாசி வட்ட்த்தில் உள்ள தொழிற்சாலைகளுக்கு பின் தங்கிய வட்டங்களுக்கான சலுகைகளை அரசு அளித்து வருகிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவினாசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சீனியம்மாளுடன் சேர்ந்து அந்த சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 174, திருமதி கவி நிலவு தர்மராஜ்; மாண்புமிகு கல்வி அமைச்சர்.

174–

மொடக்குறிச்சி தொகுதி, வடுகப்பட்டியில் நூலகம் அமைத்தல்

***19517 –திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

மொடக்குறிச்சி தொகுதி, வடுகப்பட்டியில் நூலகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கல்லாமையை இல்லாமை ஆக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே தமிழகம் எங்கும் அறிவொளி இயக்கம் கண்டு அறியாமை இருளை போக்கிக் கொண்டிருக்கிற அன்பு தெய்வம் புரட்சித் தலைவியினுடைய பொன்னான ஆட்சியிலே மொடக்குறிச்சி தொகுதியிலே இருக்கக் கூடிய 4 பேரூராட்சிகளிலே வடுகப்பட்டியும் ஒன்றாக இருக்கிற காரணத்தாலும் விவசாய பெருங்குடி மக்களை, கல்வி கூடங்களுக்கு செல்ல இயலாத கிராமீய சிறுமிகளும் சிறுவர்களும் அதிகம் இருக்கிற மொடக்குறிச்சி தொகுதியினுடைய வடுகப்பட்டி பேரூராட்சிக்கு நூலகம் ஒன்று அமைத்துக்கொடுப்பார்களேயானால்,

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றணைத் தூறும் அறிவு"

என்பதற்கு எடுத்துக்காட்டாக பள்ளி செல்ல இயலாதவர்கள் நூலகத்திற்கு சென்று கற்று அறிவதற்கான வாய்ப்பை முதியோர் கல்வி மூலம் அவர்கள் பெறுவதற்கு இயலக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மீண்டும்